*Daring and successful Robbery at Calcutta.*—A few weeks ago, about eight o'clock in the evening a party of about sixteen armed men, went in a body to the house of one of the native bankers and seized a large chest containing money and jewelry to the value of 20.000 Rps. The Banker and his servants, who attempted to defend the property, were cut down and left senseless on the floor and the robbers got clean off with their booty.

*Cholera at Kurache.*—It is now stated that no fewer than 895 Europeans—and 595 natives were carried off from the Regiments at Kurache during the *nine* days visitation of cholera at that station. About 7.000 natives perished in the town in the same period by this dreadful pestilence.

---

## OVERLAND INTELLIGENCE.

The last Overland mail via Bombay brings the important intelligence of the resignation of Sir Robert Peel and his Cabinet and the formation of a whig ministry under the leadership of lord John Russel. The duke of Wellington by the Queen's request has consented to remain at the head of the army, and it is stated that Sir Robert Peel has promised to give a general support to the intended policy of his successor. Seats in the new Cabinet were offered lord Dalhousie, lord Lincoln, and Mr. Sidney Herbert, members of the late Cabinet, which they declined. The members of the new Cabinet are

*First Lord of the Treasury*—Lord JOHN RUSSELL.
*Lord Chancellor*—Lord COTTENHAM.
*President of the council*—Marquis of LANSDOWNE.
*Lord Privy Seal*—Earl of MINTO.
*Home office*—Sir GEORGE GREY.
*Foreign Office*—Viscount PALMERSTON.
*Colonial Office*—Earl GREY.
*Chancellor of the Exchequer*—Mr. CHARLES WOOD.
*Chancellor of the Duchy of Cornwall*—Lord CAMPBELL.
*Pay master General*—Mr. MACAULEY.
*Woods and Forests*—Viscount MORPETH.
*Postmaster General*—Marquis of CLANRICARDE.
*Board of Trade*—Earl of CLARENDON.
*Board of Control*—Sir JOHN HOBHOUSE.
*Chief Secretary for Ireland*—Mr. LABOUCHERE.
*Admiralty*—Earl of AUCKLAND.

Sir Robert Peel, before retiring from Office had the satisfaction of announcing to the House that the terms of partition of the Oregon territory which the British Government had last offered to the United States had been accepted by the President, by the advice of the Senate, "without the addition or alteration of a single word," by which the great calamity of a war between two powerful and civilised countries had been averted.

Sir Robert's retirement is said to have more resembled a triumph than the enforced withdrawal of a defeated minister. His parting address to the House was received with lively marks of approbation and warm sympathy with the feeling which prompted and characterised his explanations. Mr. Hume in responding to the address affirmed that Sir Robert Peel had done more than any of his predecessors who had been Prime Ministers, for the benefit of his country, and that he quitted the helm of power amid the respect and sympathy of admiring millions. From all quarters of the empire addresses were pouring in upon him, expressing the most lively sentiments of gratitude for the sacrifices he has made in carrying out successfully the Repeal of the Corn Laws. The London Mail has the following emphatic remarks on these events:

"The declarations that henceforth the leader of the late Government will be of no party; that he will support in office those measures which promise best for the welfare of the country; and the announcement that America has accepted the terms offered for the settlement of the Oregon difference "without addition or alteration of a word," invest such events with an interest, that arouses sympathies in favor of the retiring minister, unparalleled in the pages of English history.

Nor are other concurrent circumstances wanting to render lustrous the setting of Robert Peel's political orb. The first fruits of his liberal policy are already manifesting themselves by fiscal relaxations in the Italian States, France, Germany, and even Russia, where the reductions amount to one half of preceding tariffs; and more important still, the essential spirit of freedom nourished at home by an enlightened Government, is now to be found penetrating the dark recesses of foreign despotic rule. Portugal and Spain, after ineffectual attempts to fetter the public mind, and by armed bands to enforce submission to arbitrary edicts, have been compelled to legislative assemblies and legal measures. Prussia, after many years of hesitation, has decided to meet the universal demand for free institutions, and to grant constitutional privileges hitherto withheld—States General are forthwith to be established which will have the right of voting the Budget, and consequently controlling all financial matters, whilst, to the provincial States will be assigned extended prerogatives. Other German States shew, that the vital principle is at work, and will not be extinguished. Not to them, however, is limited the regenerating influence now at work. Italy is awakening from its long slumber; and, guided by the same pervading spirit, the new head of the Papal States has just been elected; not for his weakened age and subserviency to foreign courts, but, before external influences could be brought to bear upon the Electors, for his energetic advocacy of liberal principles

In FRANCE the influence of the firm but unaggressive policy pursued by our late Government, has extended even to the allaying of national jealousies and the antipathies of the most sensitive and irritable people on the face of the earth."

ITALY.—Accounts from Rome announce the election of the new Pope by acclamation, after the conclave of Cardinals had sat only two days, and without waiting for the arrival of the foreign Cardinals who had set out to join their deliberations. The election has fallen upon cardinal Ferretti, of the family of the counts Mastai Ferretti. He was born at Sinigaglia in the states of the church in 1792. He became bishop of Imola, and was named cardinal *in petto* in 1839, and was proclaimed in 1840. He was Cardinal of the order of Priests. The conclave of the Sacred College lasted only 48 hours. Rarely has a conclave been so short: it is said that the political situation of the States of the Church, and the necessity for putting *an end to* expectations that might be changed into an alarming agitation, hastened the decision of the Cardinals. The new Pope has the reputation of being endowed with a liberal and conciliatory mind, and his appointment has in general been well received. The Cardinal Mastai Ferretti, on ascending the *throne of St. Peter,** takes the title of Pius ix. Being only 54 years old, he is one of the youngest Popes that have ever been elected. His coronation took place on the 21st May with great state.

There are related, two anecdotes which shew that on ascending the Pontifical throne he shuts his soul to all thoughts of ambition for his family, and thinks only of the great and holy obligations imposed on him by the triple crown. Two of his nephews being at Rome, he ordered one of them, who was his brother's son, to return to Sinigaglia, and tell his family that he would not have them establish themselves at Rome. To the other, a son of one of his sisters, a young officer of the Pontifical army, he declared that no promotion would be accorded to him but what was due to his rank and merit. This conduct, so different to what is generally attributed to the nepotism of Popes, only confirms what was previously conceived of his great merit. The two Secretaries of State have not yet been appointed. The Pope declared that before making this important choice be wished to meditate several days in the presence of God. His holiness has confirmed in their titles and functions the different dignitaries who formed the late Pope's Pontifical household." A correspondent of one of the Journals says:——"In 1836, I was at Naples, where I had the honour of being personally acquainted with the present Pope who was residing there as nuncio. He left in that city souvenirs which can never be effaced, particularly from the hearts of the poor. At the time of the cholera he sold his carriages, his furniture, and his plate, and distributed the proceeds among the unfortunate persons attacked by that disease. During the whole of the time that it lasted, he never ceased to give to the sick the consolations of religion and also aid from his purse. He was always on foot in the visits which he paid to them, and when observations were made to him on this point, he replied—"When the poor of Jesus Christ are dying in the streets, his ministers ought not to go through them in a carriage."

UNITED STATES.—The proposition of Great Britain for the settlement of the Oregon question was debated by the Senate for three days with closed doors when they agreed by a majority of 33 to 12 to advise the President to accept the offer. The satisfaction of all classes in the commercial cities at this result is most complete; stocks rose some 2 or 3 per cent on the receipt of the first report of settlement.

From MEXICO there was no news of importance. General TAYLOR had taken possession of the city of Matamoras, which the Mexican General Arista had evacuated, after a vain endeavour to obtain from the Americans an armistice for six weeks to enable him to communicate with his Government.—Vera Cruz was blockaded by the United States squadron. General Taylor was at the last accounts at Matamoras, waiting further reinforcements and instructions from the United States Government. It was thought the present Government of Mexico would soon be overthrown by a new revolution.

St JOHNS, Newfoundland had been almost totally destroyed by fire. Every place of business in the city had been reduced to ashes, and no less than 7,000 persons rendered houseless.

* "*The throne of St. Peter.*"—The only title Peter assumed was this: "Simon Peter, a servant and an apostle of Jesus Christ." Papal power and dominion never entered into his thoughts. A truer title would be—"the Throne of papal Ambition."—*A Bible Reader.*

---

# உதயதாரகை.

யாழ்ப்பாணம், ௲௮௱௪௬ ம் ௵. ஆவணிமீ ௨௭ உ.

### யாழ்ப்பாணம்.

உத்தியோக நிசமிதம்.—யாழ்ப்பாணத்திற் சிறிது மாசக்காலமாய்த் தாணியுத்தியோகமாயிருந்த றெப்பாட் லாங்ஸ்லோ என்பவர் மெஸ்தர் சேர் என்பவரிடத்திற்குக் காலிக்த அதியுத்தம தத்துவ மகத்துவம பொருந்திய இராசாத்தியவர்களின் அந்துவக்சாத்துக்குப் பிரதிகாரியஸ்தராகவும், வெகுகாலமாய்யாழ்ப்பாணத்திற் பற்பலவுத்தியோகங்களைப் பாரபரித்த மெஸ்தர் யோசேப் பிறெஸ்துரையவர்கள் கொழமபுக்கு அடித்தர் சென்னறலுத்தியோகமாகவும, திருக்கோணதமலக்கு நீதவானயிருந்தசார்ல்ஸ், பி. லேயாடுத்துத் துரையவர்கள் யாழ்ப்பாண டிஸ்திறிக்கட்கோட்டுக்கு நீதவானுகவும, றெப்பாட் அதட்டன் துரையவர்கள் திருக்கோணதமலக்கு நீதவானுகவும நிசமிக்கப்பட்டார்களென்று இந்த மாசம இருபதாந்தேதியிற் பிரசுரஞ் செய்யலான "கொழமபு ஒப்சேவர்" என்னுஞ் சமாசார பத்திரிகையினுற்றெரியவந்தது.

### மோரிஸதீவு.

அபிலவ்பிறன்ஸ் என்னும மறுநாமத்தையுடைய மோரிஸ்தீவிற் கோவர்ணதேசாதிபதியவர்கள் அத்தீவைவிட்டுப் பிறன்ஸ் குருவானவரொருவரைத் துரத்திவிடுமபடி தீர்மானிக்கவேதுவாயிற்று. என்ன காரணத்தினலெனில், கோவாணமேந்தார் தங்கள் சமபளங்கொடுத்துச் சில குறித்த எல்லைமானங்களுக்குள்ளாகமாத்திரமிருந்து சிலபல கடமைகளைச் செய்யவேண்டுமென்றுகோவாணமேந்தார்கட்டளையிட்டிருந்தாலும இந்தக் குருவானவர் அக்கட்டளைநிருபத்தைமீறித் தேசாதிபதியவர்களின் பெண்சாதியால் ஸ்தாபிக்கப்பட்ட சிற்சில பள்ளிக்கூடங்களிலுந் தாமே தன்முனைப்பாய்த் தலையிட்டுக்கொண்டு புறேடெஸ்டாண்டு குருமார்களாலே ஞானஸ்நானமபெற்றுக் கல்யாணங்கைப்பிடிக்கப்பட்ட ஆட்களுக்குத்திருமபவுந் தானும ஞானஸ்நானமும நற்கருணையுங்கொடுத்துக் கல்யாணத்தையுங் கைப்பிடித்துவிட்டதுமன்றிக் கடைசியாய்க் கண்டவர்கள் கேட்டவர்கள் சகலமானபேர்களும அழலெழக்கோபிக்கத்தக்கதாயப் பிள்ளைவயிற்றேடே காலஞ்சென்ற ஒருஸ்திரியின் வயிற்றைக்கீறிப் பிள்ளையையெடுத்து அதற்குஞானஸ்நானங்கொடுக்கவும அதொரு கிறிஸ்தமானபிள்ளையாய் மாணமடைந்ததென்பதை இறந்துபோனஸ்திரியினுற்றார்பெற்றார்சகலருமறியுமபடி செய்யவும

இவளை அத்தீவைவிட்டுத் துரத்த ஏதுவாயிற்று.

கற்கத்தா.

சத்தியவேதவர்த்தனை.—கற்குத்தா நகரிக்குக் கிட்டுமானமாய், மகா யோக்கியமான குடிதலத்திற் பிறந்த ஓர் வாலிபன் அஞ்ஞான மதத்தை இகழ்ந்து மெஞ்ஞான மார்க்கமாகிய புறேட்டேஸ்டாண்டைப் புகழ்ந்து அதே சத்திய மார்க்கமென்றுணர்ந்து தன்னுற்றர் பெற்றர் முதலிய இனவேந்துக்களை விட்டுக் கிறிஸ்து மார்க்கத்திற் சேர்ந்தானெனத்தெரியவந்தது.

துணிந்தெடுத்த களவு.—இற்றைக்குச் சிறிது கிழமைக்கு முன்னே ஒரு நாளிராத்திரி எட்டு மணி போலக் கிட்டத்தட்டப் பதினறு கள்வர் ஆயுதபாணிகளாய் அவ்வூர்ப் பிறந்த ஒருவருடைய ஊக்க வீட்டுக்குட்சென்று கிட்டமுட்ட இருபதினயிரம உருபாவளவுக்கு நகைகளையும பணங்களையும ஒரு பெட்டகத்தோடே தூக்கிக் கொண்டோடி விட்டார்கள். இக்கள்வர் புதுந்திவ்விதமாய்க் களவெடுத்ததைக் கண்ட திரவிய வியாபாரியும அவன் வேலைகாரும களவுபோகாமற்பண்ணக் கூடியளவு தெண்டித்துக் கள்ளரைத் துரத்துமபடி பார்த்த வேளையில் அக்கள்வரிவர்களை வெட்டிக் கிடத்திப் போட்டு உடைமைகளையுங் கொண்டோடிவிட்டார்கள்.

லாகோர்.

லாகோரிலுள்ள ஓர் நிற்பந்தன் தானிதற்குமுன் ஐந்துபேரைக்கொலைபண்ணினதென்றறுக்கையிட்டதினுல் அவனைப்பிடித்துக் கத்திகளாலுஞ் சூட்டுக்கோல்களினுலும வெட்டிச் சுட்டு வாதைப்படுத்தினதின்பின்னுல் அவனை உயிரோடே எடுத்து நெருப்பில் வைத்துத் தகனித்துப்போட்டார்கள்.

பிரானஸ்தேசம.

பிரான்ஸதேசத்திராசாவும அவர்பரிவாரமும மற்றும மெய்காப்பாளர் முதலிய சகலமானபேர்களும இரதத்திலேறி உலாத்திவருகையில் இராசாவைச் சுட்டு விழுத்தப்பார்த்த துரோகியைப்பிடித்து விளங்குமபடி மறியற்சாலையிலடைத்துவைத்ததைப்பற்றி மேலைச் சஞ்சிகையொன்றிற் பிரசுரஞ்செய்யப்பட்டதைக் காண்பீர்கள். அத்துரோகியை விளங்கித் குற்றப்படுத்திக் கொன்றுபோடுமபடி தீர்மானமபண்ணிவைத்திருக்குது.

ரகுநாதபு.

இராசபைத்தியம.—லீஞசிங்கமெனனுமாசன் இச்சேலவு நடந்த சகநாதோச்சவதினத்தில், சகநாதமென்கிற விக்கிரகத்திற்குபகாரமாக ஒரு பிரமாண்டமான யானையையும், சிறப்பான ஒரு குதிரையையும, நானுவிதமான பொன், வெள்ளி ஆபரணதிகளையும, நாலாயிரம உருபாவையுங் கொடுத்துவிட்டானென்று தெரியவந்தது. இப்படி வீண் மாய்கைக்கென்று செலவழித்த பணத்தையெடுத்து நற்கிரியைகளுக்காகச் செலவிடுகில் உண்டாகுமநயமெவ்வளவோ!!

வாணுகூர்.

இவ்விடத்திலே கண்டாலுங்கேட்டாலும மனமொடுங்கிப் பதைபதைக்கத்தக்க ஓர் கொலைநடந்தது. எப்படியெனிற் சிறிதுபேர் தாங்கள் முன்னுள்வழக்கப்படி ஓரிஸ்திரியை நாயகனுடன் உடன்கட்டைஏறுமபொருட்டுக் கொண்டுவந்து சடங்குசெய்யுந்தானத்திற்குக் கிட்டவைத்திருக்கையில் அவள் அவர்களுடைய கையைவிட்டுப்பறித்துக்கொண்டோடப்பிரயாசப்படவெண்ணிப் பெருந்தாலெடுத்துக் கூவென்றதால் அச்சத்தத்தை அடுக்கக்குடியிருந்த ஏரோப்பைத்துரைமகனுநவர் கேட்டுவந்து அவளை விடுவிக்கக்கூடிய பிரயெத்தனப்பட்டும கூடாமையால் அப்பாதகர் அவளைத் தங்கள் எண்ணமபோலத் தகனப்பலியாக உயிரோடே விறகுகட்டையின்மேல்வைத்துச் சுட்டுச்சாமபலாக்கிப்போட்டார்கள. இவ்விதமான கோடூரத்தைச்செய்த பாதகத்துரோசிகள் ஆக்கினைப்படுவார்களென்பதற்கையமில்லை.

அமேரிக்கா.

ஒறிக்கன் என்னுஞ் சீமையைப் பற்றி இங்கிலாந்தாருக்கும அமெரிக்காவாருக்கும வெகுகாலமாயிருந்த சச்சரவுகளெல்லாம் யுத்தத்திற்கடுத்த யாதாமொரு பிணக்குமில்லாமல் இராசிப்படுத்தப்பட்டன.

---

கனம்பொருந்திய முகாமைக்காரரே,

தங்கள் தாரகைப்பத்திரிகையே சகலர்க்குஞ் சலாக்கியமென்றும், அஃதே கல்விக்குயோக்கியமென்றும், அறிவுவிருத்திக்கு நல்வாக்கியமென்றும், அதையறிவதே பாக்கியமென்றும் பலரும்புகழ்ச்சி சொல்லி மகிழ்ச்சியடைகிறார்கள். ஆகையால் மதிநுட்பமுள்ளஉங்களுக்கு அதிதிட்பமில்லான் வந்தனந் தந்தனம்.

பாவபுண்ணியமென்னப்பட்ட துவிதவித கீர்த்தியங்களுள் பாவஞ்செய்வது மகாபிரயாசமென்றும் புண்ணியஞ்செய்வது மிகவெளிதென்றும் என்னுடன்வாதுபண்ணிய மூவரோ, எங்கள்நகட்சியாருக்குமுள்ள வாதத்தையும் அதற்குள்ளபேதத்தையும், இரண்டிற்குமுள்ள நீதத்தையுங் கலைஞான சிரோமணிகளாகிய கதிர்காமர் வல்லியப்பர்முதலிய பற்பல வித்பன்னர்கள் காதலாமலகம்போலெடுத்துக் காட்டினர்கள். பாவஞ்செய்வது மகாலேசுவென்பதற்கு உதாரணங்களையும் விடுத்துத் தீட்டினுர்கள். அவைகளோ, ஞானமில்லார்க்குத் தூஷணமாயும், அதையுடையவர்களுக்குப் பூஷணமாயும், அஞ்ஞானத்தைத் துறக்கிறதாயும், மெஞ்ஞானத்தைத் திறக்கிறதாயுமிருக்கின்றன. அவையோ அனேகர்க்கு நன்மை தருகின்றன அவையாற் பல நல்லறிவும் வருகின்றன. இப்படியிருக்க, நீங்களோ உங்கள்வாயை அடைத்து மௌனமாயொன்றுந் தாரகையிலிதுவரைக்கும் பேசாதிருக்கிறது என்னகாரணத்தையிட்டென்று அடியேனுக்குத் தெரிந்திலன். ஏதும்பேசவினியிடமுண்டோவென்றும் பிரிந்திலன்! அரைக்காசுபெற்றகுதிரை அஞ்சுபணத்துப்புல்லைத் தின்றற்போல என்னுடன் வாதாடி மடிந்தீர்கள். அவ்வேளையிலென்னைக் கடிந்தீர்கள். நீங்களோ தீமையைப் புகழ்ந்துகொள்ளுகிறீர்கள்; நன்மையை இகழ்ந்து தள்ளுகிறீர்கள். கடைசியாய் அடியேனுங்களைக் கேட்பதியாதெனில், "அரைக்காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது—ஆகாதவனென்று பேரோடுக்க அரைநாழிகை— கெடுவாய் கேடு நினையாதே தானே கேடு வரும்" என்று முதியோரிற்பெரியோர்கூறிய முதுமொழிகளின்பயனென்னவென்பதைத் தாரகை வழியாய் அறிவியுங்கள்.

யாழ்ப்பாணம், பறங்கித்தெரு,
ஆவணிமீ. க. தேதி.

இப்படிக்கு,உங்கள்
மெஞ்ஞானத்தை விரும்பியிருக்கிற,
ஆடி சின்னத்தம்பி.

---

இதயமுடிய விருட்படலிரிந்திட
உதயதாரகை உவப்புடன்விடுக்கும்
முதியன் மைனர் முகமலர்காண்க.

சீருறுவான் கீழெங்குஞ் சிறந்தவிப்பூவின்மாக்கட்
கேருட்னிடைசை செய்யுமியேசுவினேசநாமங்
கார்கலப்பின்றியோதிக் கதிவழியதனைக்காட்டுந்
தார்குருசபையோர்சீஷர் தழைத்தென்றும் வாழி
வாழி.

இயேசுவென்மீட்பனன்பால் எவ்விசுவாசிகட்குந்
தேசுறுபதவிநாட்டுந் திடம்மறைவாழி, வாழ்கப்
பேசருமுதவியாலும் பெருமையோரோவரும்வாழி
மாசுறு பதிதர்மற்றர் மனந்திருப்புற்று வாழி.
அரியமாவேதபோதம் அன்புடன்றீட்டிநாளும்
பரிதிமுன்பனியேபோலப் பாசமயங்கள்பாழ்ப்பத்
தனையினிலுதிக்குமுதய தாரகைவாழியத்தைத்
தெரிபவர் பரிபாலிப்போர் திறமுடனுழிவாழி.

நமது திவ்விய ஞானதிகாரக் கடவுளருளிய தசகற்பனையை நவகற்பனையாக உபதேசிப்பதற்கும், தேவநற்கருணையைச் சபையார் ஒருவகையிலுங்குருக்கண்மார் இருவகையிலும் அங்கீகரிப்பதற்கும், அற்சிய சீஷர்களைப் பிரார்த்திக்கவும், தேவவுத்தரமடைந்தனரோவென்பதைக்குறித்து நமது உரோமான் கத்தோலிக்குச் சகோதரர் சாந்தமாய் நியாயாங்கியஞ்சமஞ்செய்து விளக்கும் உதயதாரகை மூலமாய் அடியேனுக்குத் தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவைமுதலிய ஐயங்களைப்போர்ந்த வேதசாட்சிகளினுலத் தெளிவிப்பார்களானுல் அவர்கள் மார்க்கம் உண்மையென்றும் அவர்கள் திருச்சபை தவறுமையுள்ளதென்றும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

திண்டுக்கல்.
௲௮௱௪௰௬ ௵
ஜூலாய்மீ, ௩௰ தேதி.

ஓர் சபஸ்கிரைபர்
சத்தியவேதப்பிரியன்.

---

உதயதாரகையின் முகாமைத்துரையே,

நல்லூர்க்கந்தசுவாமிகோவிலில் திருவிழாவில் முருகமூர்த்தியைத் தேரிலெழுந்தருளப்பண்ணி நற்கிரியாங்கங்களைச்செய்து துற்கிரியையான ஆட்டுக்கடாயைத்தேர்ச்சில்லில்வைத்துவாச்சியினுல்தச்சர்வெட்டுகிறதற்குச் சங்கைபோந்தவேதக்குட்டி ஐயரவர்கள் என்னசாத்திரமுண்டென்று தாரகை வழியாய் அறிவிக்கும்படி கேட்கிறேன்.

இப்படிக்கு நீர்வேவியிற் பஞ்சாட்சரக்
குருக்கள் சீஷன் நல்லூர் குடி.

---

பொன்னிலக்காமெனப்புலவர்கள்போற்றும்,
மின்னிலங்கெழிலின் மேவுதாரகையை,
இந்நிலஞ்சேல்ல ஏவுகோமகற்கு;
முன்னில்வாழ்வு மொய்த்துடனேந்துக.

நன்னூல் எழுத்தியல் கூஉம் சூத்திரம் (இடுகுறிகாரணப் பெயர்பொதுச்சிறப்பின) வென்பதற்கிட்டுறமொழிதலென்னும் உத்தியின்படி கூறியவுரைக்குதாரணமோதியபோந்துழிக் காரணவிடுகுறிப்பெயர்க்குக்காட்டியமுக்கணனெனுஞ்சொல் விநாயகமூர்த்தி முதலான்வர்களைக்கருதுழிக் காரணமென்றும பாமசிவனைக் குறிப்புழி இடுகுறியென்றும காண்டிகை விருத்தியுரையாசிரியர்கள் சொல்வதென்னை? பாமசிவனுக்குக் கண்மூன்றின்றே. இது என் புன்மனத்து விளக்கமுறாது மலைவுசெய்தலிற் கற்றறிந்த நிபுணரிதனை யுற்றறிந்தோர் விடையுதவ வேண்டாநிற்கின்றன்.

இலக்கணமறிநெறி இலக்கியல்சிறுவன்.

---

மனிதருக்குண்டான குறைவுகளை நிறைக்க விவிலியவேதாகமமே தகுந்ததென்பது.—கடவுள் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமமோவென்றல், அறிவையடையுமுயற்சியை அதிகப்படுத்துகுது. அறிவானது சத்திய பத்திக்குச் சத்துருவென்றுஅதுஎண்ணுகிறதில்லை. பென்யமீன் பிறங்லின் என்பவர் தான் சாலோமோன் எழுதின நீதிமொழிகளைப் படித்தவனென்றெங்ளுக்குச்சொல்லாதிருக்கில், பின்னை அவரவைகளை விளங்கி அறிந்துகொண்டானென்றெங்களுக்குத் தெரியவரும். கருத்தாவில்லையென்று சொல்லும மந்திரியொருவன் அடைந்துகொள்ளும் ஞானத்திலும இச்சீவ வெளிப்படுத்தல்களைப் படிக்கின்ற ஏதை மனிதனடைந்துகொள்ளும ஞானமோ அதிகம். மேலும் விவிலிய வேதாகமமானது உலகசாரோபகாரா தன்னிட்டத்தையும அதிகப்படுத்துகுது. தனக்குந் தன்னைப் படைத்த கடவுளுக்குமுண்டான சேர்மானமியாதென்பதை மட்டிட்டறிந்துகொள்ளுகிறவனே தனக்கும் மற்றும பிறனுக்குமுள்ள சேர்மானமின்னதென்று நன்றய் விளங்கியறிந்துகொள்ளுவான். மேலும தனது சொந்த ஆத்துமாவின் மேன்மையையும அதின் அருமையையுமறிகிறவன் கட்டாயமுள்ளவனுயிருக்கமாட்டான். வேதாகமத்தை இஷ்டமாய்க் கற்றவிடமேதென்றும, கல்லாதவிடமேதென்றுமெனக்குச் சொல்வீர்களானுல் அப்பொழுது நானுலகத்தைப் பற்றி இருவினைக்கடுத்த ஒரு புவனசாத்திரமெழுதிச் சனங்களின்சுயலட்சணமயாதென்றேவ்வொன்றையும விபாமாயெழுதுவேன். இத்தாலியா நாட்டுக்குப்போய்அங்குள்ள புத்தகசாலையில் வேதாகமமிருக்குதோவென்று கேளுங்கள். அங்கேயில்லையென்பார்கள். இருந்தாலுஞ் சாதாரண மனிதருக்குக் கிடையாத அவ்வளவு விலைபெற்றது. பிரசங்கிகளுமோ வேதாகமத்தில் முகவுரை வசனமெடுத்துப் பிரசங்கமபண்ணுகிறதில்லை. வாற்றிக்கன் என்ற உரோமையிற் பிரதான புத்தகசாலையிற் பிரவேசித்து வேதபுத்தகமுண்டோவென்று விசாரணைபண்ணினுல், இருக்குது. ஆனுலதுவும் வாசிக்கப்படாதென்று பாப்பு விலக்கின புத்தகங்களிலொன்றென்பார்கள். சனங்களைப் பாருங்கள்! அவர்கள் பேசத்துணிகிறதில்லை. மெல்ல மெல்ல நடக்கிறார்கள். ஆயுதந்தரித்த தலையாரியொருவன் அன்னியன் வைத்திருக்கும வேதபுத்தகத்தை அவன் கையிலிருந்து திருகிப் பறித்துக்கொள்ளுகிறன். எங்கே பார்த்தாலும அங்கெல்லாம அறிவும சிறுமையும இடுக்கணுஞ்சூழ்ந்திருக்கும. கச்சவடமோ கண் தூங்குகுது. வேளாண்மைத் தொழிலோ மெலிந்து போகுது. நுட்பமான வித்தைகளுண்டு, ஆனுலுமவைகளுபயோகமுள்ளவைகளல்ல. பாமாணு கனப்படைந்துபோயிற்று. அருபமாய் வல்லமையுள்ள தத்துவத்தையுடைய கடவுளாலிழுபட்டதாக நீ உணருகிறய்.

சுவிற்சேலந்து, ஒல்லந்து, இங்கிலாந்து, இஸ்கொத்திலாந்து தேயத்திற் போய்பபாருங்கள். எங்கேபார்த்தாலும நவமானகாட்சியாயிருக்கும. ஆரைப்பார்த்தாலும எவருமிட்டமாய்ப் பரிமாறுகிறார்கள். அங்கே முயற்சியும, தெளிவும, பாலபோதமுமுண்டு. இதற்குக்காரணமென்ன? என்னவேயானுல், அவர்களிடத்தில் வேதாகமமுண்டு. அதையுள்ளவர்களே பாக்கியர். சனசதளங்களையுயர்த்துகிற நீதி அதுவே.

---

## பதம்.

இறந்தாரெங்களுக்காக இயேசுமன்னர்முன்னே
இப்படியோரன்பரெமக்கியார்சொல்லெடிமின்னே.

பிறந்ததுவுமவர்க்குநாம்பெறுவதுவுமவர்க்கே இறந்தாலுஞ்சிறந்தாலும் யாதுமவர்க்காமே. இற.

அஞ்ஞானத்துகினீக்கி அணைத்தணைத்துமுத்தமிட்டுப் பொய்ஞ்ஞான நாயகரிற் புகுதாமற்செய்தட்டு எஞ்ஞானமோபாங்கி யெனதுமெய்யிற்பயின்றதோ மெய்ஞ்ஞானச்சுகமருளி மேலுமவராவிவிட்டு. இற.

தன்றுயர்சற்றைமறைத் தயர்கலையுந்தான்வெறுத்து ஒன்றே பற்பலவிடத்திருமூலைந்தலைத்துயர்பொறுத்து அன்றேதன் றனைமருட்டு மரியபேயினைமறுத்து என்றேனுநல்லீவை யெமக்கீயும்படிகுறித்து. இற.

பொல்லாதயூதர்பிடித்தடித்தடித்துச் செல்லப்புகழ்பிலாத்துங்கள்வழிபோங்களென்றுசொல்லவல்லாருங்கூடிமுனையாணிகொண்டுநல்ல இருஞ்சிலுவைதனிற் கைகால்தனையறைந்துகொல்ல. இற

[Glorious work of Divine grace among the Nestorians.]

(Translated from the last No. of the Star.)

பாரிசுதேசத்து அமேரிக்கன் மிசியோன்துரைச்சாணி ஒருத்திதனக்கறிமுகமானயாழ்ப்பாணம் அமேரிக்கன்மிசியோன்துரைச்சாணிக்குப்பிறகிட்டசித்திரை மீ. ௰௫ந் தேதி. எழுதியனுப்பின காகிதமாவது,

கிறிஸ்துவுக்குள்ளருமையான என் சகோதரியே, இப்பொழுது எங்களுக்குள்ளே பாவத்தைப்பற்றியுணர்ந்து பிலாபித்து ஆத்துமலாபத்தைத்தேடுமெழுப்புதலுண்டாயிருக்குது. ஆகையால் நீங்களுமெங்களுடனேருமித்து ஆண்டவனைப் புகழுங்கள் ஏனென்றால், இவ்விடத்திலுள்ள "நேஸ்றேறியா" என்னுமவருணத்தவர்கள் வெகுகாலமாய்த் தங்கள் அழியாத ஆத்துமாக்களைப் பாழாக்கி அந்தகாரப்பட்டவர்களாயிருந்தாலும் இப்பொழுதோ அவர்களுக்குள் உயரத்திலிருந்து வெளிச்சந்தோன்றியிருக்குது. எலும்புகளோவ்வொன்றுந் தன்தன் எலும்போடே சேர்ந்தது அவர்களுடைய எலும்புகள் சதைகளைத்தரித்துக்கொண்டன. சீவிய கடவுளின் ஆவியானவர் அவர்களிற் சுவாசமிட்டார். காரியமிப்படியிருப்பதால், கடவுளெமக்குக்காட்டின நிகரற்ற அன்பைப்பற்றி நாங்கள் அவரைமதித்துத் துதித்து வாழ்த்தி நாமேயெமமைத் தாழ்த்தித் துகளிலுளுக்காருகிறோம. மழையில்லாமல் முற்றய்வாண்ட இப்பெரியபள்ளத்தாக்கில் முதற்சத்தங்கேட்டிற்றைக்கு மூன்றுமாசத்துக்குமேலாச்சுது. பெண்பிள்ளைப்பள்ளிக்கூடத்திலுள்ள வளர்ந்த இரண்டு பொடிச்சிகள் முதன்முதற் பிறகிட்ட தைமாசமளவிற் றங்களாத்துமநிலைமையைப்பற்றி யுணரவும, எழுப்புதலைக்காட்டவும் ஆரம்பித்தார்கள். இந்தப்பிள்ளைகளிருவருஞ் சிறிது வாரங்களாகப் பாவத்துரோகத்தைப்பற்றி மெத்தத்துக்கப்பட்டுத் தாங்கள் கொடும்பாவிகளென்றுணர்ந்து தங்களைக் கிறிஸ்துநாதருக்கொப்புக்கொடுத்தார்கள். மார்கழிமாசமுகியுமட்டும யாதாமொரு எழுப்புதலில்லை. பிற்பாடு தைமாசத்தில் ஆண்பிள்ளை, பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் அவரவரோ ஆண்டவனைப்பார்த்து இரக்கங்கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை பண்ணினார்கள். இதற்குமுந்தினகிழமைகளில் எங்களுக்குக்கிடைத்த காட்சிகளை விரித்துரைக்கக்கூடாத அவ்வளவு பயபத்தியுள்ளவைகளாயிருந்தன. காலமேதொடங்கி இராத்திரியளவும, இராத்திரிதொடங்கிப் பொழுதுவிடியுமளவும எங்கள் வீடுகள் செபத்தின்வீடுகளாயிருந்தன. பிள்ளைகளிருந்துவாசித்துச் செபம்பண்ணப் பள்ளிக்கூட அறைகள் போதுமானதல்லாதவைகளாயிருந்தபடியால் எங்களுடைய சொந்த அறைகளை அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதாயிற்று. பாபத்திற்காகப் பிலாபிக்கிற பாபிகளுடைய சத்தங் கேளாத இடமில்லை. இராத்திரிகாலத்தில் வெளிச்சமில்லாமல் நாங்கள் மேல்வீட்டிலிருந்து கீழ்வீட்டுக்கும, கீழ்வீட்டிலிருந்து மேல்வீட்டுக்கும வரக்கூடியதாயிருந்தால் முழந்தாற்படியிட்டுச் செபம்பண்ணுகிற ஆட்களிலே பலமுறையுந் தடக்கிவிழவேண்டிவந்தது. நாள் வீதத்திற் பிள்ளைகள் படிக்கிறபடிப்புக்களைநிறுத்திச் சீவனின்பாதையைக்காட்டும விவிலிய வேதாகமமே பிரதான படிப்பாயிருந்தது. நாங்களும எங்களாற் கூடியளவு ஆத்துமாக்களைக் கிறீஸ்துவண்டைக்குத் திருப்புகிறதிலேயே முயற்சிப்பட்டவர்களாயிருக்கிறோம. பிள்ளைகளிடைக்கிடையே எழும்பிப் பிரார்த்தனைக்குப் போகிறதேயல்லாமல் மற்றும்படி அவர்கள் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்தில்இருந்துகூட்டம்வைத்துவந்தார்கள். ஒவ்வொருநாளும எங்களுக்குப் பரிசுத்த ஓய்வுநாள்போலேயிருந்தது. ஆகிலுந் துணைப்பட்டவர்களின்னாரின்னாரென்று நானுமக்குப் பேர் போட்டு எழுதி அறிவிக்கக்கூடாதிருந்தாலும பெரும்பாலும எங்களுக்குள் நடந்த சோபனசெய்தியை நீரறிய விருப்பப்படுவீரென்பதற்கு ஐயமில்லை. மேஸதர் ஸ்தோடாட் ஐயரின் பராபரிப்புக்குக் கீழாயிருக்கிற ஆண்பிள்ளைப் பள்ளிக்கூடத்தில் நாற்பது மாணாக்களளவுக்குண்டு அவர்களில் முப்பதுபேருக்குமேலே தாங்கள் மாணவாசலைவிட்டுச் சீவ வாசலுக்குட்சென்று விட்டார்களென்பதற்குப் போதுமான அத்தாட்சிகளைக் காட்டினார்கள். இம்மாணாக்கரில் அநேகர் வாலிபராயிருக்கிறார்கள் அவர்களெல்லாருங் கூரியவிவேகிகளாயிருக்கிறதுமன்றிக் கிருபையினாற் சுத்திகரிக்கப்பட்டவர்களாயிருப்பதால், அவர்களிலிருந்து நன்மையுண்டாமென்பதற்கு ஐயமில்லை. அவர்களிலநேகர் சிறிதுவருடத்தின்பின் பிரசங்கிகளாகவும், வெகுகாலமாய் மறுபடிபிறவாதமேய்ப்பர்களுடன் சபிக்கப்பட்டிருந்த சனங்களுக்குநடுவே இராசரிக்கமான ஆசாரியப்பட்டத்தைத்தரித்தவர்களாகவும வருவார்களென்று நம்பியிருக்கிறோம. மேலும இந்த அருமையான வாலிபரோவென்றால் தங்களோடடுத்தவர்களையுங் கிறிஸ்துநாதாண்டைக்கு நடத்தத் தகுமானவர்களாயிருக்கிறார்கள்.

பெண்பிள்ளைப் பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகள் முப்பத்தைந்துபேர் அவர்களில் இருபதுபேருக்குமேலே அமேரிக்காவிலுள்ள வாலிபக்கிறிஸ்தவர்களைப்போலிருக்கிறார்கள் இன்னும வெகுபேர் இந்த எழுப்புதலின்பேரில் வாஞ்சைப்பட்டிருக்கிறார்கள் அவர்களும இரட்சகரை நேசிக்கிறார்களென்றையமின்றி நினைக்கிறோம. ஆனாலும இவர்கள் சிறுபிள்ளைகளாயிருப்பதால் அவர்களுடைய நிலைமையைப்பற்றித்தீர்க்கமாய்ச்சொல்ல இடமில்லை. ஐந்து, அல்லது ஆறுபேர் மாத்திரம பாபத்தைப்பற்றி உணராதவர்களாயிருக்கிறார்கள். அவர்களுமோ தீரச்சிறுபிள்ளைகள். அவர்களோ எங்களுடையவர்களல்ல ஆண்டவனுடையவர்களென்று சொல்லத் தயாராயிருக்கத்தக்க அவ்வளவு எங்களுடைய பள்ளிக்கூடங்களினிலைமை மாற்றப்பட்டுப் போய்விட்டது. இந்த அருமையானபிள்ளைகள் தங்களூரவர்களுக் குபயோகமுள்ளவர்களாய்வருமபடி பக்குவமுள்ளவர்களாக்கப் பிரயாசப்படுவதைப்பற்றி எங்கள்பேரில் விழுந்தகடமை மகாபொறுப்புள்ளதாயிருக்கின்றதென்று நாங்கள் மனங்கொண்டு உணருகிறோம. இந்த இன்பமான முயற்சி எங்களுக்கனுகூல சித்தியாக உயரத்திலிருந்து எங்களுக்கு ஒத்தாசைகிடைக்கும்படி எங்களுக்காகச் செபம்பண்ணுங்கள்.

இந்த எழுப்புதல் எங்கள் பள்ளிக்கூடங்களிலுண்டானபோதைக்கும அதினாலுண்டானபலன அப்பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகளுக்குமாத்திரமல்ல அச்சுக்கூடங்களில் அச்சடிக்கிறவர்களில் அநேகரும எங்கள் சமுசாரத்தில் வேலையாயிருக்கிறவர்களும இந்த நற்கிரியையிற் பங்குள்ளவர்களானார்களென்று எண்ணவேண்டியது இல்லையென்றுபோகிலும ஒன்பது கிராமங்களில் வெகுசனம உண்மையாய்க்துணைப்பட்டிருக்கிறார்கள். "கூக்தேபர்" என்றகிராமத்தில் இருபது, அல்லது இருபத்தைந்துபேர் துணைப்பட்டார்கள் சிறிதுகிராமங்களில் இதிலுங்கொஞ்சப்பேர். இன்னுஞ்சிறிதுகிராமங்களிலாண்டோருபேர் துணைப்பட்டிருக்கிறார்கள் கொஞ்சமாவானது முழுமாவையும உப்பப்பண்ணுகுதென்பதற்கடையாளம அனேகவிடங்களிற் கண்டிருக்குதென்பதைப்பற்றிநினைத்துத்தைரியப்பட்டவர்களாயிருக்கிறோம. கிராமத்திலுள்ளவர்கள் எங்கள் பள்ளிக்கூடங்களை வந்துபார்த்து அவைகளில் நடக்கும நற்கிரியைகளைக் கண்டு தாங்களுந்துணைப்படுவதற்கேதுவாயிருந்தது ஆனாலும இப்போவோ வெகுகாலமாய் எங்கள் வீடுவாசல்களுக்கு வாதவர்களுக்கு, எங்களை வந்து கண்டுபோனவர்கள் புத்திமதிசொன்னதினால் அவர்களும முற்றய் மனதுருகிப் பாபத்திற்காகப் பிலாபிக்கிறார்களென்று நாங்கள் அடிக்கடி கேள்விப்படுகிறோம. மலையிலே இருந்த நேஸ்தோறியர் என்னுஞ் சாதியாரில் அநேகரைகள் "கூட்ஸ்" என்ற வேடச்சாதியாரற் தங்கள் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டு இங்கேவந்தொதுங்கினதினால் அவர்களுஞ்சத்தியமாய்க் துணைப்படவேண்டிவந்தது, மேலும வெகுகாலமாய் உவாத்திமாராய் எங்களிடம இருந்தவர்களும நாங்கள் நினைக்கிறபடி சத்தியமாய் மனந்திருமபினார்கள் அவர்கள் இப்பொழுது சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துநாதரைத் தங்களூரவர்களுக்கும, தங்கள் இனத்தவர்களுக்கும போயறிவிக்கும்படி தங்கள் முந்தினவீடுகளைப்பார்க்கத் தங்கள் கண்களை ஆவலாயேறெடுக்கிறார்கள். கூடிஸதானிலுள்ள மலைச்சிகாத்திலுஞ் சுவிசேஷமுற்றய்ப் பிரசங்கிக்கப்படுங்காலங் கிட்டிவிட்டதென்று நாங்கள் நினைக்கத் தீர்க்கமான நிச்சயமுண்டு. இந்த ஏதைகளானமலைவாசிகளின்பொருட்டுமுன்னுள்ளதுருமார்தங்கள் சீவனை இரையாகக் கொடுத்தும துணைப்படுதல் அதிகமாயிராதிருந்த போதைக்கும அவர்களே இப்பொழுது இந்த நற்கிரியைகளிலேற்பட்டிருக்கும எங்களுக்கு ஊழியஞ்செய்கிறபணிவிடை ஆவிகளாயிருப்பார்கள்.

இப்படியுண்டான எழுப்புதலுக்கிடைஞ்சலாய் எழும்பினவர்கள் ஒருவருமில்லை. ஆனாலும எதிரிடை கொஞ்சத்துக்குக் கொஞ்சமுண்டென்றறிகிறோம. ஆனாலும அந்த எதிரிடை எப்போவாகுதல கிழம்புகிறதைக்கண்டு நாங்கள் அதிசயப்படமாட்டோம அதுவருமென்றே காத்திருக்கவேண்டியது. சிறிது பிரசங்கிமார்களும உபதேசிமார்களும நாங்கள் ஐயுறலின்றி எண்ணுகிறபடி சத்தியதெய்வபத்தியுள்ளவர்களாய் வந்ததுமன்றித்தங்களாலானமட்டுஞ்சத்தியமார்க்கபட்சாய் நடக்கிறதற்கும மறுபேருக்கு முன்மாதிரிகாட்டி நடக்கிறார்கள். பிரசங்கிகளாயிருந்தாலென்ன, உபதேசிகளாயிருந்தாலென்ன, புத்தகம வாசிக்கிறவர்களாயிருந்தாலென்ன, நாங்கள் நமபிக்கைவைத்தசகலரும மெய்யாகவே சுறுசுறுப்பான கிறிஸ்தவர்களாயிருக்கிறார்கள். தாங்கள் விலைகொடுத்துக்கொள்ளப்பட்டபொருளென்று அவர்களெண்ணுகிறதேயன்றி மற்றும்படி தாங்கள் தங்கள் சொயபொருளென்றெண்ணி நடவாமல் ஆவியினாலுஞ் சரீரத்தினாலுங் கடவுளைவாழ்த்துவது தங்கள்கடமையென்றெண்ணுகிறார்கள். இந்த எழுப்புதலுண்டான அன்னியநாளில் பாபத்திற்காகப்பரிதாபப்பட்டுணர்ந்த கூலிக்காரனொருவன் காலமேதொடங்கிப் பொழுதுபடுமட்டுந் தன்போசனத்திற்காகப் பிரயாசப்பட்டு வேலைசெய்கிற வேளையிலும தன் உடன்வேலைகாருக்குக் கிறிஸ்துவின அன்பைப்பற்றி இடைவிடாமற்பேசிஅவர்கள்மனந்திரும்புமபடி எச்சரித்துப் புத்திசொல்லி வயல்வெளியிலே தூவுவெட்டிக்கொண்டுநிற்கிற சனங்களுக்காகச் சத்தமிட்டு வாடிக்கையாய்ச் செபம்பண்ணி வருகிறன். இந்தப் பள்ளிக்கூடத்திலுள்ள ஆண்பிள்ளைகளும பெண்பிள்ளைகளும தாங்களோவ்வொருவரையுமழைத்துப் புத்திசொல்லிச் செபம்பண்ணமல் எவரையாகுதல் போகவிட்டால் அதற்காக அவர்கள் மெத்தத்துக்கித்து விதனமடைகிறார்கள். நான் நமபுகிறபடி எங்கள் வளவுக்கு வருகிற அல்லது வளவிலிருந்துபோகிற எவனுக்காகுதல் வாய்போகிற ஆக்கினைக்குத்தப்ப வழிபாரோன்று பலமுறையும புத்திசொல்லி எச்சரியாமற்போக வாவிடுகிறதில்லை.

தெய்வபத்தியுள்ள இந்தக் கிறிஸ்தவர்களுடைய நிதார்த்தத்தைப்பற்றி நிச்சயமாய்நடந்த வர்த்தமானம ஒன்றைச்சொல்வேன். சிறிதுமாசக்காலமாக மலைநாட்டுக்கிராமத்திலிருந்து ஒரு சிறுபொடிச்சி எங்கள் பெண்பிள்ளைப்பள்ளிக்கூடத்திற்சேர்ந்து படித்துவந்தாள். அவளுடையதகப்பன் ஒரு உபதேசி. இந்த எழுப்புதலுண்டான அன்னியநாளில் இந்தமனிதன் தன் மகளைப் பார்க்கும்படி வந்ததினால் நாங்கள் நமபுகிறபடி அவரோரு மெய்யானகிறிஸதவனானார் அவர்போய் இரண்டாமுறைவருமபொழுது பொல்லாத யுத்தப்பிரியமுள்ள தன் சகோதரனொருவனையுங் கூட்டிவந்தார். அவர்கள் எங்கள்வளவுக்குவந்தது ஒருசனிக்கிழமைபின்னேரம அவன் தனது சகோதரனுடைய கேள்விப்படி ஞாயிற்றுக்கிழமையும எங்கள் வளவில் நின்றுபோகச் சம்மதித்தான். அவனுடையவிலாவில் ஒருபெரிய நீண்ட ஈட்டி சொருகியிருந்தது. நான் அமேரிக்காவைவிட்டு இவ்வூருக்கு வந்ததின்பின்னால் நான்கண்ட எவனிலும இவனுடைய தோற்றம எங்கள்தேசத்து மேற்குவனாந்தாங்களிலுள்ள வேடசாதிக்குச் சமானமாயிருந்தது. அவன்வந்த அன்றிராத்திரி, பெண்பிள்ளைப்பள்ளிக்கூடத்து உவாத்திகளிலோருவருடன் விடுதிபண்ணினான். இந்த உவாத்தியார் மற்றநாளளவும அவனுக்குப் புத்திபோதனைசொல்லியும யாதொன்றிலும அவன்மனதுபதியாததினால்மற்றுந்தேவபத்தியுள்ளவர்களையும அழைத்து மாறிமாறி அவனுடன்சமபாஷணைபண்ணிச் செபம்பண்ணினதினால்ஞாயிற்றுக்கிழமைசூரியனஸ்தமிக்கக் கொஞ்சநோத்திற்குமுன் அவன்தன் அரையிற்சொருகியிருந்த ஈட்டியை எடுத்தெறிந்துபோட்டு "இந்த ஈட்டியை இனிநான் பிரயோகிக்கிறதில்லை" என்றுரப்பரித்து "மனிதருஞ் சகோதாருமானவர்களே இரட்சிக்கப்படவேன்னசெய்வேன்" என்று கண்சாக்கக் கூவேன்றன். அவனைத் தேவ ஆட்டுக்குட்டியண்டைக்குத்திருப்பியும அவன் மற்றநாள் எங்களை விட்டுப்போகுமளவுக்கும மன்னிப்படைந்தானென்ற அத்தாட்சியைக் காட்டவில்லை. ஆனாலும அவன் தானிருக்கும பாழான மலையிற்போனபிறகு சகல அறிவிற்கும மேலானதாகிய கிருபாகடாட்சத்தை அவன் அடைந்துகொண்டானென்று அவனிற்றுலாமபாமாய் வெளித்தது. கிறிஸ்துநாதரில் அவனொரு மாசற்ற ஆட்டுக்குட்டியானதின்பிறகும எங்களைவந்து கண்டான் அவனுமவன்சகோதரனும மெத்தநமபிக்கையுள்ளவர்களாய்த் தங்கள் சிநேகிதருடைய ஆற்றும நன்மைக்காக அவர்களுக்குப் புத்திமதிசொல்லுகிறதிலே மெத்தப் பிரயாசிகளாயிருக்கிறார்களென்று தெரியவருகின்றது. அவர்களுடைய கிராமத்தில் இப்பொழுது சற்றே எழுப்புதலுக்கிடமாயிருக்குது அநேகமபேர் துணைப்பட்டார்களென்றும நமபுகிறோம இந்த எழுப்புதலைப்பற்றி நானுமக்கு அநேககாரியங்களை விபரமாயெடுத்தெழுதஆசையிருந்தும இடமபோதாது. பத்துப்பேருக்குப்பதிலாக அனேகமாயிரமபேர் ஆண்டவனண்டைதிரும்புவதை நாங்கள் கண்கொண்டு பார்க்கவும் இந்த ஏழைச்சனங்கள்பேரிற் தேவன்காட்டும வரப்பிரசாதத்தை நாம தடைப்படுத்தாமற் சாந்தமுள்ளவர்களாயிருக்கவும எங்களுக்காகச் செபம்பண்ணுவீரொன்றும் நமபியிருக்கிறேன்.

## CONTENTS.


| | |
|---|---|
| On Hindu Idolatry - - - | 113 |
| A few chapters from the Life of Luther - | 114 |
| Little Mickey - - - - - - | 115 |
| Idea of the church—Points of Christian union - | 117 |
| History of St. Veronica - - - | ib |
| Encouraging prospects of the German Catholics | ib. |
| Should one Editor go to law with another Editor? | ib. |
| Mesmerism—Official changes - - - | 118 |
| Proceedings of a French Catholic priest at the Mauritius | ib. |
| Free Trade - - - - - | ib. |
| Summary of English Intelligence - - | ib. |
| Summary of Tamil Intelligence - - | 119 |
| Communications - - - - - | ib. |
| Glorious work of Divine grace among the Nestorians | 120 |


Printed and Published at the American Mission Press, Jaffna, by Eastman Strong Minor.